**O.S.No. 107/2020 நாள் 06.03.2026 PW 1 – திரு. ஜெயமணி**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணைதொடர்ச்சி (14 ம் பிரதிவாதிதரப்பில்)

எனது தாத்தா பெயர் என்னவென்றால் மரியேந்திரன் நாடார். எனது தாத்தாவிற்கு என் அப்பா ஜெகநாதன் எத்தனாவது பையன் என்றால் 5 வது பையன். எல்லாத்துக்கும் மூத்தவர் பெயர் சிங்கராயன்நாடார், 2 வது அந்தோணி சவரிமுத்து, அதற்கு அடுத்து மிக்கேல் நாடார், 4 வது பெர்க்மான்ஸ் நாடார். 5 வது எனது அப்பா. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாத்தா சொத்தை பாகம் பிரிப்பதற்காக வழக்குதாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்கள் 171, 172 ல் உள்ள எனது பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ–2 ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–3 ஆவணத்தில் நான் தாக்கல் செய்தது என்றால் சரிதான். இதில் பேச்சிமுத்து மற்றும் ஞானபிரகாசம் நாடார் மகன் புதுமைக்கண் நாடார் பெயரும் பட்டாவில் துலங்குகிறது என்றால் சரிதான். மேற்படி பெயர்கள் தவறுதலாக உள்ளது என்று வட்டாட்சியரிடம் மனு எதுவும்கொடுத்தேனா என்றால் இல்லை. மனு கொடுக்காததற்கு என்ன காரணம் என்றால் அதற்குத்தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து சர்வே எண். 172/2 கீழ்புரம் 1 ஏக்கர் 10 செண்ட் இடத்தை மாப்பிள்ளையூரணி கிராமத்தில் இருக்கும் சிங்கராயன் நாடார், ஜெகநாதன், சவுந்திரம், மரியான்ஸ் ஆகியோர்கள் சேர்ந்து 07.12.1981 ல் புதுமைக்கண் நாடார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது போலியான பத்திரம். போலி பத்திர விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் இல்லை, இப்போதுதான்

தெரியும். 14ம் பிரதிவாதி செல்வராஜை தெரியுமா என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2020ல் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 14ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. எதிர்வழக்குரையில் எனது அப்பா, பெரியப்பா பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து தபசில் இடத்தை 14ம் பிரதிவாதியின் தந்தைக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. போலியான பத்திரத்தை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இனிமேல்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். மரியேந்திரன் நாடார் மகன் மிக்கேல் நாடார் என்றால் சரிதான். மிக்கேல் நாடார் அவர்கள் மகன் அலெக்ஸ் , பெர்க்மான்ஸ் மகன் மரியான்ஸ் ஆகியோர்கள் சர்வே எண். 172/2ல் 1 ஏக்கர் நிலத்தை அரசகுமார் நாடார் மகன் கருப்பசாமி அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் எனது அப்பா கொடுக்கவில்லை. தபசில் சொத்தை பேச்சிமுத்து என்பவருக்கும் எனது தாத்தாவின் பேரப்பிள்ளைகளை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், அவர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர் எழுதிக்கொடுத்தால்தான் சேர்க்கவேண்டும். தபசில் இடத்தை எனது தாத்தாவின் பிள்ளைகளான எனது அப்பா, எனது பெரியப்பா, அவரது பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து சுமார் 45 வருடங்களுக்கு முன்பாகவே கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் இருக்கலாம், நான் என்னுடைய பாகத்திற்குத்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது வில்லங்கசான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் நான் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை, வழக்கறிஞர் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். வழக்கில் மற்ற

பிரதிவாதிகள் எல்லோரும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை என்னால் படிக்க இயலுமா என்றால் கண்ணாடி இல்லாததால் படிக்க இயலாது. தபசில் சொத்தில் எனது தகப்பனாரின் சொத்தையும், எனது தகப்பனாரிடமிருந்து ஜெகநாதன் நாடார் என்பவர் புதுமைக்கண் நாடார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும், புதுமைக்கண் நாடாரிமிருந்து 14ம் பிரதிவாதியின் தகப்பனார் கிரையம் வாங்கி கொண்டார் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விவரங்கள் எல்லாமே தெரிந்துவிட்டு 14ம் பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் தபசில் சொத்தை பொறுத்து கூட்டு அனுபவம் செய்து வந்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் தபசில் சொத்தை கூட்டு அனுபவம் செய்ததற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் தாக்கல் செய்திருப்பார். நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிராது 7வது பாராவில் 1முதல் 13 பிரதிவாதிகளும் பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 45 வருடத்திற்கு முன்பாகவே தபசில் சொத்தை எனது தகப்பனார், மற்றும் பிரதிவாதிகள் மற்றும் அவரது தகப்பனார் எல்லோரும் புதுமைக்கண் நாடார் மற்றும் பேச்சிமுத்து என்பவர்களுக்கு கிரையம் கொடுத்து அனுபவத்தை ஒப்படைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. பேச்சிமுத்து என்பவரை கட்சியாக வழக்கில் சேர்க்காதகாரணத்தினால் அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றுசொன்னால் சரியல்ல. முன்னோர்களிடமிருந்து தபசில் சொத்தை

கிரையம் வாங்கிய நபர்களுக்கு தனித்த அனுபவம், தனி பட்டா அவர்கள் பெயரில் ஏற்பட்ட பிறகு வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 14ம் பிரதிவாதியின் நிறையீட்டு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மற்ற பங்காளிகளுடன் சேர்ந்து கூட்டு அனுபவம் என்று சொல்வது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.